தள்ளுநடையிட்டுத் தவழ்ந்து விளையாடும் பிள்ளைமை
நீங்காத பெற்றியான் – ஒள்ளிழையார்

- **பலப்பட்டைச் சொக்கநாதபிள்ளை**

## கலிங்கத்து பரணி

வரைக்கலிங்கர் தமைச்சேர மாசை யெற்றி
வன்தூறு பறித்தமயிர்க் குறையும் வாங்கி
அரைக்கலிங்கம் உரிப்புண்ட கலிங்க ரெல்லாம்
அமணரெனப் பிழைத்தாரும் அநேக ராங்கே!

வேடத்தால் குறையாது முந்நூல் ஆக
வெஞ்சிலை நாண் மடித்திட்டு விதியாற் கங்கை
ஆடப்போந் தகப்பட்டேம் கரந்தேம் என்றே
அரிதனைவிட் டுயிர்பிழைத்தார் அநேக ராங்கே!

சேனைமடி களங்கண்டோம் திகைத்து நின்றோம்
தெலுங்கரேம் என்று சில கலிங்கர் தங்கள்
ஆனைமணி யினைத்தாளம் பிடித்துக் கும்பிட்
டடிப்பாணர் எனப் பிழைத்தார் அநேக ராங்கே!

- **செயங்கொண்டார்**

## பெத்தலகேம் குறிஞ்சி

ஆதிமலை யெங்களுக்ககோ ஏதன்மலை யம்மே
ஆண்டவனார் எங்களைத்தாம் அமைத்தமலை யம்மே
நீதியென்ற நால்வரமுங் கொடுத்தமலை யம்மே
நித்தியமும் சாகாமல் நின்றமலை யம்மே
சாதனையாய்ப் பேய்பிறகு கெடுத்த மலை யம்மே
தற்பரனர் எம்மையங்கே சபித்த மலை யம்மே
பேதகமாய் நாங்களதை விட்டதற்பின் னம்மே
பெத்தலகேம் எங்களுக்குப் பெரியமலை யம்மே.

**- தஞ்சை வேதநாயக சாத்திரியர்**

## எந்நாளோ?

என்னருந் தமிழ்நாட்டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால், அன்பால்
உன்னத இமமலை போல்
ஓங்கிடும் கீர்த்தியெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ!

**-புரட்சிகவிஞர் பாரதிதாசன்**

************************

**தயாரிப்பு**
ம. விமல் பதினோராம் வகுப்பு, "அ" பிரிவு
அரசு மேல்நிலைப் பள்ளி, கசிநாய்கன்ப்பட்டி

***Success***

***See your goal - Understand the obstacles - Create a positive mental picture - Clear your mind of self-doubt - Embrace the challenge - Stay on track - Show the world you can do it***